கொண்டு அதற்கென்று தனியாக அதிகாரிகளை நியமித்து அதன் மூலமாக அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, தமிழ்நாடு பூராவும் எத்தனை மனமகிழ் மன்றங்கள் இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் என்ற பெயரில் சூதாட்டம் நடக்குமானால் அந்தத் தகவலைக் கொடுத்தால் போலீசார் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது சம்பந்தப்பட்ட சப்-ரிஜிஸ்திரார் செக்ஷன் 38, உடபிரிவு 2-இன்கீழ் அந்த உரிமத்தை ரத்து செய்யலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மகிழ்ச்சியோடு கேட்கலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : கேள்வி 134-இல் ஒரு துணை வினா. தமிழ்நாட்டினுடைய வரலாற்றுக்கு மிக்க தேவைப்பட்ட . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி அது அல்ல இது அடுத்த கேள்வி.

நெல்லிக்குப்பத்தில் கால்நடை மருந்தகம் அமைத்தல்

136—(* வினா எண் 8793) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் நகரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் கருத்துரு அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் பகுதி நிறைந்த விவசாயப் பெருமக்களை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும். அங்கே

1987 மார்ச் 23]

இருக்கின்ற விவசாயப் பெருமக்கள், கால்நடைகளுக்கு மருந்து தேவைப்படுமேயானால் கிலோமீட்டர் கணக்கில் நடந்து சென்று வைத்தியம் பார்க்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகின்றபொழுது இல்லை என்று சொன்னார்கள், இருந்தாலும் நடப்பு நிதியாண்டிலேயாவது ஒரு மருந்தகத்தை அமைக்கின்ற செயற்குறிப்பை மாண்புமிகு அமைச்சரவர்கள் உருவாக்கித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்திற்கு அருகில் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் காராமணிக் குப்பம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் உள்ளது. தவிர, மூன்று கிலோமீட்டர் தூரத்தில் மேல்பட்டாபாக்கம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் உள்ளது. மேலும் ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சி. என். பாளையம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் உள்ளது. நெல்லிக்குப்பத்திலேயே தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒரு கால்நடை கிளை நிலையம் இயங்கி வருகிறது. அந்த நகராட்சியிலிருந்து, கால்நடை மருந்தகம் துவக்க வேண்டுமென்று விண்ணப்பம் இல்லை.

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு எத்தனை கால்நடை மருத்துவ மனைகள் அரசால் அனுமதிக்கப்பட்டன? இந்த ஆண்டு எத்தனை கால்நடை மருத்துவமனைகள் அனுமதிக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 10 மருந்தகங்கள், இந்த ஆண்டும் 10 கால்நடை மருந்தகங்கள் திறக்க அனுமதிக்கப் பட்டிருக்கிறது.